பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

05 08 2024 **MONDAY** **7.15 PM**

தலைப்புச் செய்திகள்

1. பங்களாதேஷில் இடஒதுக்கீட்டுக்கு எதிரான போராட்டம் முற்றியதையடுத்து பிரதமர் பதவியை ராஜினாமா செய்த திருமதி ஷேக் ஹசீனா இந்தியா வந்து சேர்ந்தார்.

2. மின்னணு விசா, வசதி 167 நாடுகளுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

3. தேசிய தொழில் பழகுநர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், தமிழகத்தை சேர்ந்த 2 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பயடைந்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

4. மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின்கீழ், இதுவரை ஒரு கோடியே 86 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பயனடைந்துள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

5. பாரிஸ் ஒலிம்பிக் மல்யுத்த போட்டியில் இந்தியாவின் நிஷா தஹியா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இனி விரிவான செய்திகள்--

<<<<<<>>>>>>

பங்களாதேஷ் பிரதமர் பதவியை திருமதி ஷேக் ஹசீனா ராஜினாமா செய்துள்ளதாக அந்நாட்டு ராணுவ தலைமை தளபதி ஜெனரல் **Waqar Uz Zaman** அறிவித்துள்ளார்.

நாட்டு மக்களிடையே தொலைக்காட்சி வாயிலாக உரையாற்றிய அவர், இடைக்கால அரசு விரைவில் ஏற்படுத்தப்படும் என்றார்.

பொதுமக்கள் ராணுவத்தின் மீது நம்பிக்கை கொண்டு அமைதி காக்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

இதற்கிடையே, பிரதமர் இல்லத்தில் போராட்டக்காரர்கள் நுழைந்துள்ளதாகவும், திருமதி ஷேக் ஹசீனா பாதுகாப்பான இடத்திற்கு சென்றுள்ளதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்நாட்டு அரசு அறிவித்த இடஒதுக்கீட்டு கொள்கைக்கு எதிராக மாணவர்கள் நடத்தி வரும் போராட்டத்தில் நேற்று மட்டும் 100 பேர் உயிரிழந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

காவல்துறையினருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே ஏற்பட்ட வன்முறையில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

இந்நிலையில், பங்களாதேஷிலிருந்து வெளியேறிய திருமதி ஷேக் ஹசீனா, காசியாபாத்தில் உள்ள **Hindon** விமானப்படை தளத்தை வந்தடைந்ததாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே, பங்களாதேஷை ஒட்டிய எல்லைப்பகுதியில் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு உள்ளதாக எல்லை பாதுகாப்புப்படை தெரிவித்துள்ளது.

தற்போது எல்லைப்பகுதியில் நிலைமை கட்டுக்குள் உள்ளதாகவும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த சோதனைச்சாவடிகளில் வாகன போக்குவரத்துக்கு பல்வேறு கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன.

<<<<<<>>>>>>

ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் மக்களின் எதிர்பார்ப்புகளை தமது அரசு பூர்த்தி செய்யும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அரசியல் சாசனத்தின் 370 மற்றும் 35-ஏ பிரிவுகளை ரத்து செய்து இன்றுடன் ஐந்தாண்டுகள் நிறைவடைந்ததையொட்டி சமூக வலைதளத்தில் அவர் இக்கருத்தை பதிவு செய்துள்ளார்.

நாட்டின் வரலாற்றில் முக்கியமான தருணம் இது என்று அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இதன்பின்னர், ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக்கின் வளர்ச்சியில் புதிய அத்தியாயம் தொடங்கப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

மகளிர், இளையோர், பிற்படுத்தப்பட்டோர், பழங்குடியினர் என அனைத்து தரப்பினரும் வளர்ச்சியின் பலன்களை தற்போது பெற்று வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜம்மு காஷ்மீரில் பல ஆண்டுகளாக நிலவி வந்த ஊழல் அகற்றப்பட்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

முத்ரா கடனுதவித்திட்டத்தின்கீழ், வாராக்கடன் மிக குறைந்த அளவே உள்ளது என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், இரண்டு புள்ளி ஒன்று பூஜ்யம் சதவீதம் அளவிற்கே வாராக்கடன் உள்ளதாக குறிப்பிட்டார்.

பொதுத்துறை வங்கிகள், தனியார் வங்கிகள், மண்டல ஊரக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், வங்கி சேவை சாரா நிதி நிறுவனங்கள் இந்த கடனுதவியை வழங்கி வருவதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் கூறினார்.

<<<<<<>>>>>>

மின்னணு விசா, வசதி 167 நாடுகளுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், 30 சர்வதேச விமான நிலையங்களிலும், ஆறு துறைமுகங்களிலும் இந்த விசா வழங்கப்படுவதாக கூறினார்.

<<<<<<>>>>>>

தேசிய பறவையான மயிலை பாதுகாக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு புபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் இதனை தெரிவித்த அவர், கர்நாடகாவின் **Adichunchanagiri** மற்றும் கேரளாவின் **Choolannuar** மயில் சரணாலயங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.

தில்லியில் மயில் உயிரிழந்ததற்கு கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்ததே காரணம் என்றும் அமைச்சர் தெளிவுபடுத்தினார்.

<<<<<<>>>>>>

திறன் இந்தியா இயக்கத்தின்கீழ், இளையோருக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இன்று மக்களவையில் இதனை தெரிவித்த திறன் மேம்பாட்டுத்துறை இணையமைச்சர் திரு ஜெயின் சௌத்ரி, தேசிய தொழில் பழகுநர் மேம்பாட்டுத்திட்டத்தின்கீழ், 2018-ஆம் ஆண்டு தொடங்கி, கடந்த ஜூன் மாதம் வரை 29 லட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு பயிற்சி அளிக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

இதில் தமிழகத்தை சேர்ந்த 2 லட்சத்திற்கும் மேற்பட்டோரும், புதுச்சேரியை சேர்ந்த 6 ஆயிரத்திற்கும் மேற்பட்டோரும் பயனடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கைவினைக்கலைஞர் பயிற்சித் திட்டத்தின்கீழ், 79 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பயனடைந்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் மத்திய அரசு பல்வேறு நிதியுதவிகளை வழங்கி வருவதாக விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், கேலோ இந்தியா இயக்கத்தின்கீழ், சிறப்பு பயிற்சிகள் வழங்கப்படுவதாக கூறினார்.

ஒலிம்பிக் போட்டியை இலக்காக கொண்டு பயிற்சி பெறும் வீரர்களுக்கு சர்வதேச தரத்தில் பயிற்சிகள் வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

விளையாட்டுத்துறையின் வளர்ச்சிக்காக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களையும் அமைச்சர் பட்டியலிட்டார்.

<<<<<<>>>>>>

அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கான பிரதமரின் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ், பயன்பெற இதுவரை 50 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பதிவு செய்துள்ளதாக மத்திய தொழிலாளர் நலத்துறை இணையமைச்சர் ஷோபா **Karandlaje** கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், 2019-ஆம் ஆண்டு இதற்கான திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதாக தெரிவித்தார்.

18 முதல் 40 வயதுக்கு உட்பட்ட அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு ஓய்வூதிய பாதுகாப்பு வழங்கும் வகையில், இந்த திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

<<<<<<>>>>>>

நகர்ப்புறங்களில் பசுமை மண்டலங்களை மேம்படுத்துவதற்காக மாநில அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மத்திய அரசு நிதியுதவி வழங்கி வருவதாக சுற்றுச்சூழல் துறை இணையமைச்சர் திரு கீர்த்தி வர்தன் சிங் கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் இதனை தெரிவித்த அவர், இதற்கென திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

நகர்ப்புறங்களில் வசிப்பவர்களுக்கு ஆரோக்கியமான வாழ்க்கை சூழலை வழங்க வேண்டும் என்ற நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் திரு கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின்கீழ், இதுவரை ஒரு கோடியே 86 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பயனடைந்துள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

இந்த திட்டத்தின் நான்காம் ஆண்டு தொடக்கத்தை முன்னிட்டு, இன்று சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பாக பணியாற்றியவர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் விருதுகளை வழங்கிய பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

தொற்றா நோய் பாதிப்புகளை தடுக்கும் நோக்கில், இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

பருவமழை பாதிப்புகளை தடுக்கும் வகையில் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருவதாகவும் திரு மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

மதுபானக்கொள்கை முறைகேடு வழக்கில் சிபிஐ கைது செய்ததை எதிர்த்து தில்லி முதலமைச்சர் திரு அரவிந்த கெஜ்ரிவால் தாக்கல் செய்த மனுவினை தில்லி உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

நீதிபதி **Neena Bansal Krishna** இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தார்.

இந்த கைது சட்டவிரோதமாக கருத முடியாது என்றும், அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிவாரணம் கோரி விசாரணை நீதிமன்றத்தை திரு அரவிந்த் கெஜ்ரிவால் அணுக தடையேதும் இல்லை என்றும் நீதிபதி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

ராஜஸ்தானில் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இதேபோல், குஜராத் மற்றும் மகாராஷ்ட்ராவில் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இமாச்சலப்பிரதேசம் மற்றும் உத்தராகண்டில் அடுத்த இரு தினங்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீர், உத்தரப்பிரதேசம் ஹரியானா, பஞ்சாப் மற்றும் தமிழகத்தின் ஒரு சில பகுதிகளிலும் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பாரிஸ் ஒலிம்பிக் மல்யுத்த போட்டியில் இந்தியாவின் நிஷா தஹியா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்
மகளிர் 68 கிலோ எடைப்பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 6-4 என்ற புள்ளிக்கணக்கில் உக்ரைனின் **Tetiana Sova**-வை வென்றார்.

----------------

டேபிள் டென்னிஸ் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.
இன்று நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்தியா 3-2 என்ற ஆட்டக்கணக்கில் ரோமேனியாவை வென்றது.

--------------

துப்பாக்கிச்சுடும் போட்டியின் 25 மீட்டர் பிரிவில் **Maheswari Chauhan – Anantjeet** இணை நான்காவது இடத்தை பிடித்தது.

-------

பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் பிரிவில் வெண்கலப்பதக்கத்திற்கான ஆட்டத்தில் இந்தியாவின் லக்ஷயா சென் - மலேசியாவின் **Lee Zii Jia –**விடம் தோல்வியடைந்தார்.

---------

பாரிஸ் ஒலிம்பிக் போட்டித் தொடர்பான அஞ்சல் தலை இன்று புதுதில்லியில் வெளியிடப்பட்டது.
மத்திய அமைச்சர்கள் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா, திரு மன்சுக் மாண்டவியா ஆகியோர் இதனை வெளியிட்டனர்.

<<<<<<END>>>>>>